## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் (கனடா)
## KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS ASSOCIATION (CANADA)
## 2017

# 18 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்

# பண்ணிசைப் போட்டி

1. கற்றவர்விழுங்குங் கற்பகக்கனியைக்
    கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை
    மதிப்பவர் மனமணிவிளக்கைச்
செற்றவர்புரங்கள் செற்றவெஞ்சிவனைத்
    திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்றன்னைக் கண்டுகண்டுள்ளங்
    குளிரவென்கண் குளிர்ந்தனவே.

02. சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால் — பண் - பழந்தக்கராகம்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளத்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிடம்
பிறையாளன் றிருநாம மெனக்கொருகாற் பேசாயே.

03. நீள நினைந்தடி யேனுமை — பண் - நட்டராகம்
    நித்தலுங் கைதொழுவேன்
வாளனக் கண்மட வாளவள்
    வாடி வருந்தாமே
கோளிலி எம்பெரு மான்குண்டை
    யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெரு மானவை
    அட்டித் தரப்பணியே.